உ

# ஞானோதயம்

ஞானம் 01 சுபானு ௵ சித்திரை ௴ (05- 04- 2004) உதயம் 1



சித்திரை 2004 அன்பளிப்பு: ரூபா 15/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாதத்தின் மூலம் சைவநெறியை நிலைநாட்டிய
# வாதவூரர்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

999 அடியார்கள் சூழும்படியாக நடுநாயகமாக வீற்றிருக்கும் ஞானாசாரியரைக் கண்டார். உடனே நெஞ்சினால் வணக்கம் செய்தார். அந்த ஞானாசாரியாரது அழகொளியைக் கண்டார். பின்னர் அவரைப் பார்த்துச் சுவாமி தங்களது சிவந்த கரத்தில் பொருந்தும் புத்தகம் யாது? என வினாவினார். அதற்குப் பரமாச்சாரியார் மெய்யாகிய சிவஞான போதம் என்றார் திருவாதவூரடிகள். மீண்டும் அந்த ஞானாசாரியாரைப் பார்த்துச் சுவாமி சிவஞான போதத்தின் பொருள் சொல்லுவீரேயானால் உமக்கு அடிமை என்றார். அதற்கு ஞானசாரியார் சிவமாவது ஒரு வஸ்து. அவ்வஸ்துவை வழிபட்டு உள்ளவாறு அறிதலே ஞானபோதமாவது. அனுபூதியில் ஆகும அளவையில் வைத்து நிச்சயம் செய்தலே என்று பொருள் கூறியதும். திருவாதவூரடிகள் மனம் நெக்குருகியது. தம்மை ஆட்கொள்ளும் பொருட்டு எம்பெருமானே வந்துள்ளார் என்பதை உணர்ந்து பரமாச்சாரியரை நோக்கிச் சுவாமி என்னை இன்று அடிமை கொள்ள வேண்டும் என்று கண்களிலே நீர் சொரியக் குருசந்நிதியிலே வணங்கினார். அங்கே சூழ்ந்துள்ள அடியார் கூட்டத்துள் ஒருவர் ஞானாசாரியரைப் பார்த்து அவரது வினைகளை அகற்றி ஆளவேண்டும் என்று இறைஞ்சினார். ஞானாசாரியாரும் உடன்பட்டார்.

அதன் மேல் திருவாதவூரடிகளைப் பரமாச்சாரியார் பார்த்து அப்பனே நீ முன் ஜென்மத்திலே செய்த நல்வினை காரணமாக உன்னை அடிமை கொள்ளும் பொருட்டு இத்திருப்பெருந்துறையின் கண்ணே வந்தோம். நீ கவலைப்படுதலை நீக்குவாயாக என்றார். பின்னர் அடிமை கொள்ளத் திருவுளங் கொண்டார். பரமாசாரியர் அங்கே கூடியிருக்கும் தொண்டர்களுக்குள்ளே முதல்வரைப் பார்த்து இத்தினத்திலே அடிமை கொள்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வாயாக எனப் பணித்தார்.

அத்தொண்டரும் அப்பூஞ்சோலையின் கண்ணே திட்சைக்கு இயைந்த பூங்கோயிலை அமைத்தார். அக்கோயிலின் கண்ணே ஓர் திவ்விய ஆசனத்தையும் அமைத்தார். அதன்மேல் பரமாச்சாரியரை அணுகிக் கோயிலும் திட்சை மண்டபமும் அமைக்கப்பட்டது என்று விண்ணப்பம் செய்தார். பரமாச்சாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் வாதவூரருக்கு மாயாமலம் சக்திகுன்றும் நல்ல சமயம் அடிகொள்ளும் தினம் இது வென்று தோன்றுதலும், மனதிலே நினைத்து ஸ்நான மண்டபத்தை அடைந்து பன்னீரினாலும், வாசனையூட்டிய கங்கா தீர்த்தத்தினாலும் ஸ்நானம் செய்து விலைமதித்தற்குரிய செம்பட்டாடையை உடுத்துத் தீட்சா மண்டபத்தை அடைந்தார். திருவாதவூரடிகளும் சுத்தமாகிய நீரிலே ஸ்நானம் செய்து வெண்மையாகிய இரண்டு வஸ்திரங்களைத் தரித்து விபூதி பிரகாசிக்கின்ற திருமேனியுடன் ஞானசாரியாருக்கு அருகிலே சென்று அப்பெருமானுடைய திருவடிகளுக்கு அபிஷேகம் செய்து அருச்சித்து சந்தனக் குழைப்பை அப்பெருமானுடைய திருமேனியிலே கிருபாநோக்கஞ் செய்தலாகிய சட்சு தீட்சையையும் செய்து அதன்பின்பு அவரது செவிப்புலன் வழியே ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்தலாகிய வாசிக தீட்சையைச் செய்தருளினார். இதன்மேல் வாதவூரர் இருள்நீங்கப் பெற்றுத் துதித்து மென்மையாகிய திருவடிகளை வணங்கினார்.

சந்நிதியிலே வீழ்ந்து நமஸ்கரித்துப் பெருவாழ்வை அடைந்தார். அவ்வமயம் குருமூர்த்திகள் தீவிர பக்குவம் பொருந்திய இவ்வடிகளுக்கு தம்முடைய ஞானாசக்தி, கிரியாசக்தி ஆகிய இரு திருவடிகளையும் ஆதரவோடு சூட்டுதலாகிய திருவடி தீட்சையையும் செய்தருளினார். அத்தருணம் சிவகணங்கள் தோன்றுதலும் திருவாதவூரடிகள் சிரசிலே பொருந்திய திருவடிகளை இரண்டு கைகளினாலும் இரண்டுகண்களிலே ஒற்றி மார்பிலே அணைத்துச் சிவானந்தக் களிப்போடு எடுத்தார். அத்தருணம் தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். ஆலவட்டங்கள் அசைந்தன. முனிவர்கள் வணங்கினார்கள்.

ஞானாசாரியர் வீற்றிருக்கும் போது வாதவூரர் அவரது முன்னிலையிலே அவரை வலம் வந்து நின்று பிரமவிஷ்ணுக்களாலும் தேடி அறிய முடியாத தேவரீர் நாயினும் கடையேனாகிய தமியேனது பிறவித் துன்பத்தை நீக்கி ஆட்கொண்ட தன்மை என்கொலோ என்று பிரலாபித்து நின்றார். மேலும் அறிவுக்கு அறிவாய் உள்ளவரே தேவரீருடைய திருவடிகள் அடியேனால் துதிக்கப்படுகின்றன என்று புலம்பினார்.

வளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரக்காவின் மாண்புகள்

எல்லோராலும் மலரக்கா என அழைக்கப்படும் மனைவிகள் இராமநாதன் அவர்களுடைய மாண்புகள் எழுத்தில் அடங்காது. தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்வியில் சிறந்து விளங்கியதுடன், சிறந்த ஆசிரியராகவும் திகழ்ந்தார். மேலதிக அரசாங்க அதிபர் இராமநாதன் அவர்களைத் திருமணஞ்செய்து இல்லறவாழ்க்கையை மேற்கொண்டார். கணவன் அகால மரணத்தைத் தழுவிக் கொண்டதும் அதன்மேல் செய்த பணிகளை அளவிட்டுக் கூறமுடியாது. ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவதற்கும் சோதிட விடயங்களை எடுத்துக் கூறுவதற்கும் அவருக்கு நிகர் அவரேயாகும். இராமநாதன் கல்லூரி, துர்க்கா தேவஸ்தானம், காசிவிநாயகர் தேவஸ்தானம் முதலாய பொது ஸ்தாபனங்களுக்கு அன்னாரின் பணிகள் அளப்பெரியன. இவ்வாறு நாட்டுப்பணிகள் செய்ததோடு நில்லாது தனது தம்பிமாரின் பிள்ளைகளையும் படிக்கவைத்து நன்நிலைக்குக் கொண்டு வந்த பெருமை அவரையே சாரும். இங்ஙனம் பெரும் பணி செய்த அம்மையாரின் பிரிவு அனைவருக்கும் வேதனையைக் கொடுக்கும் செயலாகும். நியதியை மாற்ற எவராலும் முடியாது அம்மையாரின் ஆத்மா சாந்திபெற ஐங்கரப் பெருமான் திருவருள் பாலிப்பாராக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !!ஓம் சாந்தி!!!

---

# பங்குனிமாத சிறப்புகழ்

பங்குனிமாதம் மீனசங்கிராந்திஷடசதி புண்ணியகாலம்.

பங்குனி மாத மேன்மை திகழும் திங்கட்கிழமைகள் கண்ணகையம்மனைப் போற்றி வழிபடும் காலங்கள் ஆகும்.

பத்தினித் தெய்வத்தின் மகிமையைக் கவுந்தியடிகள் கண்ணகியின் கற்புநெறிப் பெருமையைப் பற்றிச் சிலப்பதிகாரத்தில் நன்கு கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி ஒரு வீரபத்தினித் தெய்வம் திருச்செங்குன்று மலைமீது தேவர்கள் பூமாரி பொழிய அழகிய தேவவிமானம் மீது அமர்ந்து தெய்வீக வடிவுடன் சுவர்க்கஞ் சென்றனர். கோவலன், கண்ணகி சிவசக்தியான வரலாறு புராணங்கள் கூறுகின்றது. கண்ணகி வழிபாடு பசு (ஆன்ம) வழிபாடாகும். இதற்கு ஆகமமில்லை (யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்) சேர மன்னன் அரசியின் விருப்பத்திற்கிணங்க இமயமலையிற் கல்லெடுப்பித்து கங்கையாற்றில் நீராட்டி ஆலயம் அமைத்து கண்ணகி அம்மன் வழிபாடு செய்து திருவிழாயாகஞ் சேவித்து உலகில் துன்பங்கள் நீங்கி அருள் மாரிபொழிய வாழ்கியலானான். ஆங்காங்கே கற்புக்கடம் பூண்ட பொற்புடைத்தெய்வமாகிய கண்ணகிக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர். சைவசமயாசார சீலர்கள்.

(மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்)

## பங்குனி உத்தரம்:

பங்குனி உத்தரநாள் நன் நாள் பொங்கலாகும். சிவபெருமானுக்கு அம்மையப்பனை வழிபட மங்கல வாழ்வு நிலைபெற திருமணக்கோலம் பூண்டிருக்கும் பிரானை நினைந்து விரதமனுஷ்டித்து சிவாலய தரிசனம் செய்து சிவாச்சாரியராகிய பிராம்மணோத்தமர்களையும் அவர்கள் தர்ம பத்தினியையும் வரவேற்று சிவதர்ம உபசாரங்களை, தாம்பூலாதி தெஷ்ணைகள் வழங்கி அவர்களிடமிருந்து மங்கல நிறைவாளி, ஆசிகள் பெற்றேகப்படுவதால் இறையாசிகளுடன் நிறைவான வாழ்வு நிலைத்திருக்கும். கன்னி தோஷம் விலகி சாந்திபெறும். நாகதோஷம். செவ்வாய் தோஷம் ஆகியன நீங்கி மங்கல வாழ்வு நிறைவேறும் நக்ஷத்திரதோஷம், நவக்கிரகதோஷம், பாவக்கிரகதோஷம் ராசிமண்டலதோஷம் இன்னும் பல தோஷங்கள் நீங்கி சாந்தியாகி நிறைவாக இறையாசிகளுடன் மங்கள வாழ்வுபெற்று நிலைத்து வாழ்வார்கள் என்பது பங்குனி உத்தர விரதஷ்டான காலமாகும். இந்து தர்ம சாஸ்திரவிதியுமாகும். இக்காலத்தில் இறைவனும், இறைவியும் திருமணக்கோலம் பூண்டிருக்கும் காலமாதலால் திருமண விரதம் எனவும் அழைப்பார்கள்.

(சைவசமயத்தின் உண்மைச் சான்றுகளாகும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி. மலைமகள் இராமநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே சிவசந்நிதிகளில் திருமணக்கோல விழாச்செய்வதும், அபிஷேகிப்பதும், அர்ச்சனைகள் புரிவதும் பங்குனி உத்தரநாள் விரதம் பூண்டொழுகுவதால் சிவசக்தி வழிபாடுசெய்தபின் மாலை நேரம் குத்து விளக்கு நல்நெய்த்தீபமேற்றி ஸ்தோத்திர பாராயணஞ் செய்தபின் அன்னபானீயம் அமுது உட்கொள்ள வேண்டும் என்பது விதியாகும். நாங்கள் சிவதீட்சை பெற்றவராய் சைவசமயாசாரசீலராய், புண்ணியசீலராய் விரத மனுஷ்டித்து வந்தால் நம் வாழ்க்கை இயல்பில் மேன்மையடையலாம்.

பங்குனி மாதத்தில் பூமி மீனராசியில் நிற்கச் சந்திரன் உத்தர நக்ஷத்திரத்தோடு கன்னியில் நின்று பூரண கலைபெற்று ஏழாமிடத்திலிருந்து தனது பூரண கிரகணத்தால் உத்தர நக்ஷத்திரகுணத்தோடு கூடி பூமிக்கு கொடுத்தலால் இத்தினம் பங்குனி உத்தரமாகியது. இக்காலத்தில் பார்வதி பரமேஸ்வரன் திருமணக்கோலம் பூண்மருந்து இப்பூவலகில் சகலஜீவராசிகட்கும் திருவருள் பிரகாசித்தருள்கிறார். உலகுய்ய இவ்வையகம் முந்துயக்கவே காத்தும், படைத்தும் கலந்தும் விளையாடி திருவிளையாடல் மூலம் திருவருளாட்சி புரிந்தருளுகின்றார்.

திருமயிலாப்பூரிலே சிவநேசச் செட்டியாருக்கு பூம்பாவை என்னும் புதல்வி அருமைப்புதல்வியாக வளர்ந்து வந்தாள். செட்டியார் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் மகிமை அறிந்து தம் புதல்வியை அவருக்கே திருமணம் செய்து வைக்க நினைத்தார். ஆனால் பூம்பாவை பூக்களை நந்தவனத்திற் கொய்கின்றபொழுது அரவம் தீண்டி இறந்துவிட்டாள். செட்டியார் மிக மனம் வருந்தி புதல்வியைத் தகனம் செய்து எலும்பையும் சாம்பலையும் சேமித்து வைத்திருந்தார். சம்பந்த சுவாமிகள் மயிலாப்பூரை அடைந்தநாளின் அறிந்து, எலும்பு சாம்பல் நிறைந்த குடத்தை எடுத்துக்கொண்டு சுவாமி தரிசனம் பெறச் சென்றார் செட்டியார். சுவாமிகள் அங்குள்ள கபாலீச்சரமென்னும் தலத்திற்கு வரவழைத்தார். அங்கு சுவாமிகளின் அற்புதம் "பலிவிழாப் பாடல் செய் பங்குனி யுத்தரநாள் ஒளிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்" என அருளுகின்றார். இந்நாளின் மகத்துவம் பற்றி கபாலீச்சரத்தான் திருமண விழாக்கோல மகிமையருளினார். தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள் யாவரும் ஆசிர்வதித்தனர்.

கபாலீச்சரத்திலே மஹோற்சவத்தில் ஒன்பதாம் நாள் திருமண மஹோற்சவநாளாகும். கபாலீச்சரர் திருமணக்கோலத்திலே யாவர்க்கும் இன்றும் அருளாட்சி புரிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாரோர் புகழவரும் பங்குனியுத்தரத்தில் ஆரூரர் வீதி யணுகினார் - நேரே பணச்சரப்பந்தரித்தும் பொற்பதத்தற் கின்றிலிச் சத்தம் கிணுக்குக் கிண்கிணுக்கென்னவே" எனத் திருவாரூர் தியாகேசப்பெருமான் திருவீதியில் பவனிவருவதும் புலவரொருவர் சந்தோஷித்து பக்திபரவசத்தால் பாடியதும் இந்நாளே மகிமையாகின்றது.

பங்குனி மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தி விரதம் அனுஷ்டித்து பச்சிலைப் புஷ்பங்களால் விநாயகப்பெருமானை அர்ச்சிப்பதால் எதிர் வரும் விக்கினங்களை நீக்கி நல்லருள் பாலிக்கின்றார்.

பங்குனி மாதத்தில் வரும் தேய்பிறைச் சங்கடஹர சதுர்த்திவிரதம் அனுஷ்டித்து விக்கினேஸ்வரப்பெருமானை பச்சிலைப்புஷ்பங்களால் அர்ச்சிப்பதால் எதிர்வரும் இடர்களை நீக்கி நல்லருள் பாலிக்கின்றார்.

# சித்திரைமாத சிறப்புகழ்

சித்திரைமாதம் மேடசங்கிராந்தி விஷு புண்ணியகாலம ஆகும்.

விஷு என்றால் இரவும் பகலும் சமனானது.

சூரியன் சித்திரை மாதத்தில் முதலாவது மேடராசியில் உதயமாவதால் சித்திரை வருஷப்பிறப்பு ஆகும். இத்தினத்தில் மருத்து நீராடி, பால், அறுகு, மஞ்சள், துளசி ஆகிய மலர்கள், பட்டை, இலைவகையால் ஆக்கிய மருத்துநீர் கங்கை நீராடி, மங்கலப்பொருட்களை தரிசித்து குருதரிசனம், தாய், தந்தையர் தரிசனம், பெரியோர், சான்றோர் தரிசனம், கோ தரிசனம், (பசு) ஆலய தரிசனம் முடித்து, ஆசிகள் பெற்று, உறவினர் பந்துகளுடன் அகமகிழ்ந்து நண்பர்களுடன் நற்சிந்தனையில் நன்மைகள் செய்வதால் சகலர்க்கும் லஷ்மீகடாட்சம் நிகழ்கிறது. இதுவே தமிழ் புத்தாண்டின் சிறப்பம்சமாகும்.

1. குருதரிசனம் பெற்றால்?
கல்வி, செல்வம், ஆயுள்ஆரோக்கியம் கிட்டுகின்றது.

2. மங்கலப்பொருட்கள் தரிசனம் பெற்றால்?
வாழ்க்கையின் லக்ஷ்மி கடாட்சம் நிலவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தாய், தந்தை தரிசனம் பெற்றால்?
தொழில்வளம் பெற்று பூமித்தாயருளினால் பூர்வீக புண்ணிய பலன்கள் கிடைக்கின்றன.

4. பெரியோர்கள், சான்றோர்கள் தரிசனம் பெற்றால்?
நற்சிந்தனையில் செல்வம், புகழ், கீர்த்தி ஆகியன வாழ்க்கையில் கிடைக்கின்றன.

5. கோ (பசு) தரிசனம் பெற்றால்?
தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள், குலதெய்வம் ஆகியவர்களின் மூலம் பித்துருக்களின் ஆசிகளினால் நமது குலவிருத்தியுடன் வைசாவளியும் தழைத்தோங்குகின்றன.

6. நட்புகழ் தரிசனம் பெற்றால்? (சான்றோர்கள்)
தெய்வீகத்தன்மையுள்ளவர்கள், ஆன்மீக வளர்ச்சிபெற்றவர்கள், இறைபணியில் தொண்டர்கள், எப்பணியிலும் தன்னலங்கருதாப் பணிசெய்வோர்கள், இப்பூதலத்தில் உண்மை வழி நின்றோர்கள் இம்மையிலும் மறுமையிலும் நற்புகழ் கீர்த்தி அடைகின்றனர்.

7. இப்பூவுலகின் பெருமையாது?
ஏழ்மையிலுள்ளவர்க்கு உதவுதல், ஏழ்மைக்கு கல்வி வசதி அமைத்தல், நன்னீர் நிலைகள் புனரமைத்தல், நமது குலத் தெய்வாலயங்களை சிரமைத்து வழிபடல், (பசு) ஆவினங்கள் முதலாக பிற உயிரினங்களையும் பாதுகாத்தல், எந்தவொரு உயிரையும் துன்புறுத்தாவண்ணம் வாழ்தல் வாழ்பவர்கள் மேன்மையானவர்கள் மேன்மக்களே.

தெய்வீக அருள் எப்பொழுதும் எக்காலத்திலும் நிறைய உண்டு. இப்பூவுலகில் நற்சிந்தனையில் செயலாற்றினீர்களானால் மனிதர்களும் தெய்வீக அருளினால் தேவர்களாகலாம்.

## சித்திராபௌர்ணமி:

சித்திரை மாதம் தேவர்களுக்கும் 15 நாழிகை முதல் 20 நாழிகை வரையுள்ள 5 நாழிகைப் பொழுதாகும். இக்காலம் மத்தியான வேளையாகும். பிதுர்காலமுமென்றாவதால் சித்திரைப் பூரணை விசேடமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை மாதமென்பது சித்திரா நக்ஷத்திரத்தோடு சந்திரன் நிற்கும் காலமாகும். அச்சமயம் பூமி மேடராசியில் நிற்கின்றது. சந்திரன் சித்திரையில் சித்திரையோடு கூடித் துலா ராசியில் நிற்கின்றது. மேடத்திலிருந்து துலாம் ஏழாமிடமாக லால் பூமிக்கு ஏழாம் பாகையில் நின்ற சந்திரன் முழுவலிமை பெற்று முழுக்கிரணத்தையும் பூமிக்கு தருகின்றது. இப்படி ஒரு நாள் ஒருவருடத்தில் வேறு ஏற்பட இடமில்லையாதலின் இத் தினம் மிகமிக விசேடமானது. இந்நாளில் சித்திரபுத்திரனார் ஆவினின்று அவதரித்தநாள். இப்பூவுலகிலே மானிடர்கள் செய்யும் தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் பாவபுண்ணிய கணக்குத் தீர்ப்பு எழுதுகின்றார். அவரவர் செய்த நல்வினை தீவினைக் கேற்ப வாழ்க்கையமைகிறது. இந்நாளில் சித்திரகுப்த விரதமனுஷ் டிக்கப்படுகின்றது. இந்திரன் விமானத்திலிருந்து இறங்கி இத் தினத்தில் விரதமிருந்து பூசித்தான் சித்திரையில் சித்திரை மிக மிக விசேடமான என திருவிளையாடற்புராணங் கூறுகின்றது.

தமிழ் நாட்டிலே மிக விசேடமாக எட்டிக்குடி முரு கன் சந்நிதியிலே இவ்விழா மிகவுஞ் சிறப்பாக நிகழ்கிறது. இந் நாளில் சமுத்திர தீர்த்தமாடி பாவவினைகளைக் களைந்து நம் குல தெய்வாலயங்களில் விசேட சித்திரை பௌர்ணமிக்கதை படித்து அபிஷேக ஆராதனையுடன் இறைவனைப் பூஜித்து சித்திரைக்கஞ்சி வார்ப்போமேயானால் யாகஞ் செய்த பலனும் அன்னதானஞ் செய்த பலனும் அடியார்கள் நலந்திகழ பக்தர் கட்கு கிடைக்கின்றன இப்பூவுலகில்.

அமாவாசை, பௌர்ணமி ஆகிய இந்நாட்களில் தாய், தந்தையர் நமது முன்னோர் மூதாதையர் அவர்கட்கு செய்யும் பிதிர்கடன்கள் செய்ய விசேடமாகும். ஊனுதர்மலோகத்தில் நாம் செய்யும் நன்றிக்கடன் தர்ப்பணம் மோட்சதீபம் விரதமும் பிரார்த்தனையும் இதுவே. தெய்வீக சாம்ராஜ்யம் தங்கும் திரு வருளாகும்.

போர்த்தேங்காய் அடித்தல் அக்காலத்தில் விநாயக வணக்கத்துடன் அமைந்தது. புதுவருடத்தின் நற்பலாபலன்களை எய்தக்கூடியதாயிருந்தது. இக்காலத்தில் மாபெரும் விளையாட் டாக எண்ணி விட்டார்கள். விபரீதமும் நிகழ்கிறது என்பது யாவரும் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் விநாயக விரதம் பெரும் சாந்நியளிக்கின்றது. சித்திரை மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்திவிரதமும், சித்திரை மாதத்தில் வரும் தேய்பிறைச் சதுர்த்தி விரதமும், அடியார்கள் விரதம் பூண்டு பால், தயிர், நெய், தேன், இளநீர், கருப்புச்சாறு, பழவகைச்சாறினால் அபிஷேகித்து, வாசனைத் திரவியங்கள் சாத்தி மந்தாரை, அறுகு, வன்னி, வில்வம், மாதுளம்பூ, வெள்ளறுகு என்பவற்றால் பூஜிக்கும்பொழுது நல்லருள் பாலிக்கிறார். வறுமை நீக்கி செல்வம் கொழிக்கிறார் விநாயகப்பெருமான்.

நம்பிக்கையுள்ளவர்க்கு என்றும் நம்பிக்கையானருள் மலர்கின்றன.

(தொடரும்)

---

# விடைக் கொத்து - 8, 9

(சென்ற இதழின் 10 – 26 வரையான வினாக்களுக்கு விடைகள்)

10. பாபவிநாசத்தீர்த்தம்
11. கோணமாமலை உச்சியில் உள்ளது
12. பாபநாசச்சுனை
13. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை என்பன
14. தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி முதலாயின
15. ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல்நாள் தீபாவளி வரும்.
16. சிதம்பரக்கோயிலைக் குறிக்கும்
17. "நந்தி"
18. சகல ஆண்பாக்கள் மேலும் பட்டது
19. மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதுமராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வயிடூரியம்
20. சூரியன், சந்திரன், சுக்கிரன், செவ்வாய், புதன், வியாழன், சனி, ராகு, கேது
21. சேந்தனார்
22. திருமாளிகைத்தேவர்
23. திரு[illegible]வாரான்
24. கு[illegible]த்தேவர்
25. தூலலிங்கம்
26. யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடப்பிறப்புக் கருமம்

தாரண வருஷம் வாக்கிய பஞ்சாங்கம்:

சித்திரை முதலாம் நாள் (2004 - 04 - 13)ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4. 00 மணி 05 நிமிடமளவில் புதுவருடம், திருவோண நட்சத்திரம், அபரபட்ச நவமித்திதியில ஜனனமாகின்றது.

லக்கினம: சிம்மம், குணம்; ராட்சதம், நட்சத்திரம்; மயில்.

மதியம 12 மணி 5 நிமிடம் முதல் பிற்பகல் 8 மணி 5 நிமிடம வரையுள்ள புண்ணிய காலத்தில் மருத்துநீராடி இறைதரிசனம் பெறுவீர்களாக.

கைவிஷேசம:

சித்திரை 2ம் நாள் 2004 - 04 - 14ம் திகதி புதன்கிழமை காலை உதயம் 6 மணி 4 நிமிடம் முதல் 6 மணி 52 நிமிடம வரை.

சித்திரை 5ம் நாள் 2004 - 04 - 17 சனிக்கிழமை 11. 58 முதல் 1. 54 வரை.

பொதுவாக புதுவருஷத்தன்று உள்ள புண்ணிய காலத்தில் கைவிஷேசம் செய்யலாம்.

---

*இச்சஞ்சிகை தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் சார்பில், அதன் தலைவர் திரு. சி. கணேசலிங்கக் குருக்கள் அவர்களால், மானிப்பாய் சௌந்தரம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org